**Hallo**
**Basel-Stadt**

Kanton Basel-Stadt

# சமூகப் பாதுகாப்பு

சமூகசேவைகள் காப்புறுதி நடைமுறை
ஓய்வு விதிமுறைகள்
இயலாநிலமை
தொழில் இழப்பீட்டு நிலை
சுகவீனம் மற்றும் விபத்து
பெற்றோர்த்துவம் மற்றும் குடும்பம்
சமூக நலன்புரி உதவி

# சமூகசேவைகள் காப்புறுதி நடைமுறை

சுவிசில் வாழும் குடிமக்கள் சமூகசேவைகள் காப்புறுதி மூலம் பல்வேறு இடர்களில் இருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனர். இக்காப்புறுதிகள் பல விதங்களில், உதாரணமாக யாராவது தனது தொழிலை இழந்தால் அல்லது சுகவீனமாயிருந்தால் உதவும். அவர்கள் அதுமட்டுமல்லாது குடும்பங்கள் மற்றும் அனைவருக்கும் ஆதரவளிக்கும்.

## அடிப்படையானவை

சமூக காப்புறுதிகள் சுவிசில் குடியிருப்போரினால் முதலீடு செய்யப்பட்டுள்ளன. இது ஒரு ஒருமைப்பாடான நடைமுறை: பெரும்பான்மையான மக்கள் இதற்கு பணம் செலுத்துகிறார்கள், தனிப்பட்ட மற்றும் குறிப்பிட்ட குழுவினர்கள் உதவியைப் பெற்றுக் கொள்கிறார்கள். சமூகசேவை காப்புறுதிகள் பெரும்பாலானவை கட்டாயமானவை. கட்டணங்கள் தொழில் புரிவோரின் சம்பளத்திலிருந்து நேரடியாக கழிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் தொழில் வழங்குவோர், சொந்த தொழில் புரிவோர் மற்றும் தொழில் அற்றோரும் பணக்கட்டணங்கள் செலுத்துவர்

## சேவைகள்

சமூகசேவை காப்புறுதிகள் குறிப்பிட்ட வாழ்க்கையில் வாழ்பவர்களுக்கு ஆதரவளிக்கின்றன. அவர்கள் நாள்ப்பணம், ஓய்வூதியம் அல்லது படிகள் அல்லது வருத்தம் மற்றும் விபத்துக்கால செலவுகள். சமூகசேவை காப்புறுதிகள் அனைத்தும் அரசால் வரையறை செய்யப்பட்டுள்ளன.

## எப்போது மனிதனுக்கு ஆதரவளிக்கப்படுகிறது?

- வயோதிபசமயத்தில், இறந்தால் மற்றும் இயலாநிலை (3 ஏற்பாடுகள்: AHV/IV, தொழில் ரீதியான ஏற்பாடு, தனியார் ஏற்பாடு)
- சுகவீனம் மற்றும் விபத்து (சுகவீன- மற்றும் விபத்துக்காப்புறுதி)
- தாய்மையுறும்போது (தாய்மைப்படிவகைகள்)
- வேலையில்லாதநிலமை (வேலையிழந்தோர் காப்புறுதி)
- பிள்ளைகளிருந்தால் (குழந்தைப்படி)

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/social-security/social-insurance-system

# ஓய்வு விதிமுறைகள்

ஓய்வு விதிமுறைகளானவை ஓய்வு பெற்றவர்கள் வாழ்வதற்கு போதியளவு பணத்தை கொண்டிருப்பதை உறுதிசெய்கிறது. சுவிஸ் ஓய்வுகால நடைமுறை 3 பிரிவாக உள்ளன: வயோதிப-பின்தங்கிய காப்புறுதி(AHV), தொழில் ஓய்வூதிய ஏற்பாடு(ஓய்வூதியம்), சுயாதீன வயோதிபர் ஓய்வூதியம் (3.Säule)

## வயோதிப- மற்றும் பின்தங்கியோர் காப்புறுதி (1 வது ஏற்பாடு,1.Säule)

வயோதிப- மறறும் பின்தங்கியோர் காப்புறுதி (AHV) ஓர் அரச நிறுவனம். பெரும்பாலான வயது வந்தோர் இதற்கு கட்டணம் செலுத்தவேண்டும். இக்கட்டணமானது தொழில் புரிவோரின் சம்பளத்தில் நேரடியாகக்கழிக்கப்படும், அத்துடன் வேலைகொடுப்போர் அரைப்பகுதியை பொறுப்பேற்பர். சொந்தத்தொழில் புரிவோரும் தொழில் புரியாதோரும் தமது இழப்பீடு அலுவலகம் (Ausgleichskasse) எப்படி தமது கட்டணத்தை செலுத்துவது என்பது பற்றி விசாரிக்க வேண்டும். AHV ஓய்வுதியம் எடுப்பவர்களுக்கு மாதாந்தம் ஓய்வூதியத்தை வழங்குகிறது. செலுத்தப்படும் ஓய்வூதியத்தொகையானது அவர்கள் முன்பு செலுத்திய தொகையைப் பொறுத்துள்ளது. அத்துடன் AHV ஒருவர் இறந்தால் அவரின் மனைவிக்கும் மற்றும் பிள்ளைகளுக்கும் உதவி புரிகிறது. (விதவை- மற்றும் பிள்ளைகள் ஓய்வூதியம்). ஒவ்வொருவரும் தமது சொந்த காப்புறுதி இலக்கத்தை கொண்ட AHV அட்டையை பெற்றுக்கொள்வர்

## தொழில்ரீதியான ஏற்பாடு (2ம் ஏற்பாடு, 2.Säule)

ஓய்வூதியம் எடுத்தபின் தாம் விரும்பியபடி தொடர்ந்து வாழ்வதற்கு, AHV மட்டும் போதியதாக இருப்பதில்லை. இதனால் தொழில் புரிவோருக்காக தொழில் ஓய்வூதிய ஏற்பாடு (ஓய்வூதியக்கொடுப்பனவு, Pensionskasse), ஏற்படுத்தப்பட்டு இது குறிப்பிட்ட வருடாந்த சம்பளத்திலிருந்து கட்டாயமாக்கப்பட்டு உள்ளது. இதன் கட்டணம் மாதச்சம்பளத்திலிருந்து கழிக்கப்படுவதுடன் வேலை வழங்குவோர் குறைந்தது அரைப்பங்கினை செலுத்த வேண்டும். சொந்தத் தொழில் புரிவோர் கட்டணம் செலுத்தவேண்டியதில்லை, எனினும் அவாகள் சுயாதீனமாக இதுபற்றி தீர்மானிக்கலாம், எனினும் அதற்கு அவர்களே பொறுப்பானவர்கள். இந்த ஓய்வூதிய நிறுவனத்தில் சேமிக்கப்பட்ட பணம் ஓய்வூதியக்காலத்தில் ஓய்வூதியமாக அல்லது ஒரே தடவையில் எடுக்கக்கூடியதாக இருக்கும். சில விசேட நிலைகளில் இப்பணம் முன்கூட்டியே கொடுக்கப்படலாம்: ஒருவர் சொந்த நிறுவனம் ஆரம்பித்தால், சுவிசைவிட்டு வெளியேறினால், சொந்த வீடு கட்டுவதாயின் அல்லது ஒரு வீடு வாங்கினால்.

## சுயாதீன வயோதிக ஏற்பாடு (3ம் ஏற்பாடு, 3. Säule)

இந்த 3ம் ஏற்பாடு (3. Säule) ஓர் சுயாதீனமான வயோதிபர்கால ஏற்பாடு, அத்துடன் வருமானவரியிலிருந்து கழிக்கக்கூடிய ஒன்று. இது காப்புறுதிநிறுவனங்கள் அல்லது வங்கிகளில் தொடங்கலாம். இந்த 3ம் ஏற்பாட்டில் பணத்தை சேகரித்து அதன்மூலம் வயோதிப காலத்தில் மேலதிகமாக வைத்திருக்கலாம்.

## மேலதிக சேவைகள்

வயோதிபர்கள் தமது வாழ்வுக்கு AHV மற்றும் ஓய்வூதியம் காணாதவிடத்து அவர்கள் மேலதிக பொருளாதார உதவிக்கு (Ergänzungsleistungen) உரித்துடையவர்களாவர். இவர்கள் சமூகப் பங்களிப்புகளுக்கான அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். இங்கு எவருக்கு இதற்கான உரிமை உள்ளது என்பது பற்றி தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது. மேலதிக உதவிச்சேவையானது வரிசெலுத்துபவர்களினால் பணமுதலீடு செய்யப்படுகிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/social-security/old-age-insurance

# இயலாநிலமை

"எவர் சுகாதாரநிலைமையின் காரணமாக நீண்ட காலத்திற்கு வேலை செய்ய முடியாத அல்லது பகுதிவாரியாக மட்டும் வேலை செய்யக்கூடியதாக உள்ளதோ நிபந்தனைக்குட்பட்ட ரீதியில் வலதுகுறைந்தோர் காப்புறுதியினால் (IV) பணஉதவி செய்யப்படலாம். இந்த IV பணம் செலுத்துவதுடன் நின்று விடாது, அவர்கள் மீண்டும் தொழில் வாழ்வில் இணைவதற்கு உறுதுı்யாக இருக்கிறது. "

## வலது குறைந்தோர் காப்புறுதி

வலது குறைந்தோர் காப்புறுதி (IV) ஓர் அரச நிறுவனம். பெரும்பாலான வயது வந்தோர் இதற்கு கட்டணம் கட்டுவர். இக்கட்டணம் தொழில் புரிவோரின் சம்பளத்திலிருந்து நேரடியாகக் கழிக்கப்படும், அத்துடன் வேலை வழங்குபவர் அரைவாசி செலுத்துவர். சொந்தத்தொழில் செய்பவர் அல்லது வேலை இல்லாதோர் இழப்பீட்டு அலுவலகத்தில் (Ausgleichskasse) எப்படி தமது கட்டணங்களை செலுத்தலாம் என்பது பற்றி விசாரிக்க வேண்டும்.

## வலதுகுறைந்தோர் காப்புறுதியின் ஆதரவுகள்

IV ஆதரவு பெறுவதற்கான நிபந்னையாக ஒருவர் குறைந்தது 1 வருடம் சுகாதார ரீதியாக (செயன்முறை அல்லது மனோநிலை) பாதிக்கப்பட்டு முற்றாக அல்லது பகுதிவாரியாக வேலை செய்யமுடியாத நிலையிலிருக்கவேண்டும். IV தன் ஆதரவை ஓர் மாதாந்த ஓய்வுதியமாக வழங்குகிறது. இதுவும் காப்புறுதிசெய்தவர் தனது பாதிப்பின் காரணமாக வேலைஉலகில் இணையமுடியாத நிலை ஏற்பட்டாலே கிடைக்கிறது. IV பாதிக்கப்பட்டவர் தனக்கேற்ற வேலை ஒன்றை பெற்றுக்கொள்ள உதவுகிறது. IV இன் ஆதரவுக்கு இழப்பீட்டு அலுவலகத்தில் (Ausgleichskasse) விண்ணப்பிக்க வேண்டும்.

## மேலதிக உதவிசேவைகள்

IV இன் ஆதரவில் வாழ்பவர்கள் தமது வாழ்வுக்கு பணம் குறைவாக இருக்குமிடத்து அவர்களின் நிலமையைப்பொறுத்து மேலதிக பொருளாதார உதவிக்கு (Ergänzungsleistungen) உரித்துடையவாகளாவர். இவர்கள் சமூகப் பங்களிப்புகளுக்கான அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். இங்கு எவருக்கு இதற்கான உரிமை உள்ளது என்பது பற்றி தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது. மேலதிக உதவிச்சேவையானது வரிசெலுத்துபவர்களினால் பணமுதலீடு செய்யப்படுகிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/social-security/invalidity

# தொழில் இழப்பீட்டு நிலை

சகல தொழில்புரிவோரும்தொழில் இழப்பீட்டுக்கு எதிராக காப்புறுதிசெய்யப்பட்டுள்ளனர். எவர் தொழிலற்று இருக்கிறார்களோ அவர்கள் குறிப்பிட்ட காலம்வரைபணஉதவி பெறுவார்கள். வேலைஇழந்தோர் பிராந்திய தொழில் தரகர் நிலையத்தில் (RAV) பதியவேண்டும். இவை வேலைதேடுவதற்கு உதவும்.

## வேலையிழந்தோர் காப்புறுதி

வேலையிழந்தோர் காப்புறுதி (ALV) ஒரு அரசநிறுவனம் மற்றும் அனைவருக்கும் கட்டாயமானது. இதற்கான மாதக்கட்டணம் சம்பளத்திலிருந்து நேரடியாக கழிக்கப்படும், வேலைகொடுப்போர் அரைவாசியை பொறுப்பேற்பர். சொந்தத்தொழில் புரிவோர் வேலையற்றோர் காப்புறுதியில் சேரமுடியாது. எவர் தொழில் இழக்கையில் வேலையற்றோர் இழப்பீட்டுச்செயலகத்திலிருந்து மாதசம்பளத்தின் பகுதியாக கிடைக்கும். (வேலைஇழப்புப்பணம், Arbeitslosengeld) எப்போது, எவ்வளவு வேலைஇழப்புப்பணம் கிடைப்பது வெள;வேறு நிலைகளில் தங்கியுள்ளது. உதாரணமாக எவ்வளவு காலம் வேலை செய்துள்ளார் அல்லது என்ன காரணத்தால் வேலையற்ற நிலைக்கு உள்ளாக்கப்பட்டார் என்பன..

## வேலை இழப்பு நிலை நடைமுறை

இறுதி வேலைநாளுக்கு முன் அறிவிப்பது மிகவும் நல்லது எனினும் பிந்தியது வேலையற்ற நிலையின் முதலாம் நாள். உடனடியாக பொறுப்பான பிரதேச தொழில் தரகர் நிலையத்திலும் (Regionales Arbeitsvermittlungszentrum, RAV) பதியவும். அங்கு தொடர்ந்து செய்யவேண்டிய நடைமுறைகள் வழங்கப்படும்.

## பிரதேச தொழில் தரகர் நிலையம்

பிரதேச தொழில் தரகர் நிலையம் (RAV) விரைவில் ஒரு வேலையை பெறுவதற்கு உதவி செய்யும். ஒருவர் தொழில் இழப்பு பணம் பெறும் ஒருவர் RAV இல் உள்ள ஆலோசனை கலந்துரையாடலில் பங்குபற்றல் கட்டாயமானதாகும். RAV பயிற்சி வகுப்புகளையும் தொழிற்கல்வி நிகழ்வுகளையும் வழங்குகிறது. இவையும் பகுதிவாரியாக கட்டாயமானவை. சுவிசில் ஒருபோதும் வேலை செய்யாதவரும் தற்போது வேலை தேடுபவரும் RAV இல் பதியலாம். எனினும் அவர்களுக்கு பணம் கிடைக்காது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/social-security/unemployment

# சுகவீனம் மற்றும் விபத்து

சுவிசில் வாழும் ஒவ்வொருவரும் ஒரு விபத்து- மற்றும் சுகவீன காப்புறுதியை கொண்டிருக்க வேண்டும். இந்த தனியார் காப்புறுதிகள் விபத்து, சுகவீனம் அல்லது கர்ப்பகாலங்களின் அவற்றின் செலவை பொறுப்பேற்கும். இந்த இரு காப்புறுதிகளையும் இங்கு வந்து 3 மாதங்களுக்குள் ஏற்படுத்த வேண்டும்.

## சுகவீனக்காப்புறுதி (அடிப்படைக்காப்புறுதி)

சுவிசில் வாழும் அனைத்துக்குடியிருப்பாளர்களும் கட்டாயம் சுயாதீனமாக சுகவீனக்காப்புறுதி (அடிப்படைக்காப்புறுதி, Grundversicherung) செய்தல் வேண்டும். சுவிசிற்குள் வாழ்வதற்கு எவர் வந்தாலும் அவர்கள் 3 மாதங்களுக்குள் இதை செய்ய வேண்டும். இக்காலப்பகுதியில் சுகவீனமாயிருப்பின் கடந்தகாலத்திற்கான செலவையும் பெற்றுக்கொள்ளலாம். இவ் அடிப்படைக்காப்புறுதி பல தனியார் சுகவீன காப்புறுதிநிறுவனங்களால் (Krankenkassen) வழங்கப்படுகிறது. காப்புறுதிநிறுவனத்தெரிவு சுயாதீனமானது. சுவிசில் வசிக்கும் அனைவரும் சுகாதாரக்காப்புறுதியில் இணையவேண்டும். காப்பீடு செய்தவர் மாதாமாதம் கட்டணம் செலுத்தவேண்டும். இம்மாதக்கட்டணம் சுகவீனக்காப்புறுதி நடைமுறைகளின் வித்தியாசத்திற்கேற்ப வித்தியாசப்படுவதால் இத்தொகைகளை ஒப்பிடுவது நல்லது. சுகாதாரக்காப்புறுதி நவம்பர் இறுதி வரை அடுத்த ஆண்டிற்காக மாற்றலாம். அடிப்படைக்காப்புறுதியானது சுகவீனத்திற்கு மட்டுமல்லாமல், கர்ப்பம் மற்றும் குழந்தை பிறப்பிற்குமான செலவுகளையும் பொறுப்பெடுக்கும். சேவைகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. குறிப்பு: சாதாரணமாக பல்சிகிச்சை மற்றும் கண்ணாடிகளுக்கான செலவுகள் சொந்தமாக செலுத்த வேண்டும் அல்லது தன்னார்வ துணை காப்பீடு மூலம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

## விபத்துக்காப்புறுதி

ஒருவர் கிழமையில் 8 மணித்தியாலத்திற்கு மேல் வேலை செய்தால், வேலைசெய்யுமிடத்தில் வேலை கொடுப்பவரால் வேலை மற்றும் ஓய்வு நேரங்களுக்கும் விபத்துக்காக காப்புறுதி செய்யப்படுகிறது. எவர் குறைவாக வேலை செய்தால் ஓய்வு நேரங்களுக்கு காப்புறுதி செய்யப்படாது, சொந்தமாக செய்யவேண்டும். இது சொந்தத்தொழில் செய்பவர்களுக்கும் வேலை இல்லாதவர்களுக்கும் பொருந்தும். வேலை இல்லாதவர்கள் தமது சுகாதாரக்காப்புறுதியில் விபத்துக்கும் காப்புறுதி செய்தல் வேண்டும். சொந்தத்தொழில் செய்பவர்களும் வேறு காப்புறுதி நிறுவனங்களில் விபத்துக்காப்புறுதி செய்தல் வேண்டும். காப்புறுதி செய்தவர் மாதாமாதம் கட்டணம் செலுத்தவேண்டும். தொழில்புரிவோரில் அவர்களின் சம்பளத்தில் இது நேரடியாக கழிக்கப்படும்.

## கட்டணக்குறைப்பு

எவர் தமது சுகாதாரக்காப்புறுதிக்கட்டணம் செலுத்தமுடியாத நிலையிலுள்ளாரோ, குறித்த நிபந்தனையின்கீழ் அவருக்கு அடிப்படைகாப்புறுதிக்கு கட்டணக்குறைப்பு (Prämienverbilligung) கிடைக்கிறது. மருத்துவகாப்புறுதிக் கட்டணக் குறைப்புக்குரிய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து சொத்து மற்றும் வருமானம் பற்றிய தகவல்களையும் வழங்க வேண்டும். இது அனுமதிக்கப்பட்டால் அடுத்த மாதத்திலிருந்து குறைந்த கட்டணம் செலுத்தலாம். மாநிலத்திற்கு பிந்தி வந்து குடியேறியிருந்தால் விசேட விதிமுறைகளுண்டு. சமூகப் பங்களிப்புகளுக்கான அலுவலகம் கட்டணக்குறைப்பு பற்றி தகவல் தெரிவிப்பதுடன் அதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்கிறது.

## அடிப்படைச்சுகாதாரக்காப்புறுதியுடனாக மேலதிககாப்புறுதி

அப்படைக்கட்டாயக்காப்புறுதியுடன் சுயாதீனமாக பல மேலதிக காப்புறுதிகளையும் (Zusatzversicherungen) செய்யமுடியும். இவை அடிப்படைக்காப்புறுதி செலுத்தமறுக்கும் சேவைகளை வழங்கும், உதாரணமாக பல் சேவைகள். இம்மேலதிக காப்புறுதிகள் பொதுவாக சகல சுகாதார காப்புறுதிகளும் வழங்குகின்றன. எவரையாவது மேலதிககாப்புறுதி செய்யலாமா அல்;லது ஏற்காமல் இருப்பதா என்பதை சுகாதாரகாப்புறுதிநிறுவனங்கள் சொந்தமாக முடிவு செய்ய முடியும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/social-security/illness-and-accidents

# பெற்றோர்த்துவம் மற்றும் குடும்பம்

எவருக்கு பிள்ளைகள் உள்ளதோ, அவர்கள் பிள்ளைகள்- மற்றும் கல்விக்கொடுப்பனவுகள் மூலம் ஆதரிக்கப்படுகிறார்கள். தொழில் புரியும் பெண்கள் அவர்களின் குழந்தைப்பிறப்பிற்கு பின்பு குறைந்தது சம்பளத்துடன் கூடிய 14 வார மகப்பேறுவிடுமுறைக்கு உரித்துடையவர்.

## மகப்பேறு உதவித்தொகை

பெண்கள், வேலைசெய்யும் காலத்தில் குழந்தை பிரசவித்தால் பெரும்பாலும் அவர்களுக்கு 14 வார மகப்பேற்று விடுமுறைக்கு (Mutterschaftsurlaub) உரிமையுள்ளவராகிறார். இந்தக்காலப்பகுதியில் அவர்களுக்கு குறைந்தது 80% சம்பளம் கொடுக்கப்படும். வேலையிழந்த அல்லது வேலை செய்ய முடியாத பெண்கள் தமது இழப்பீட்டு அலுவலகத்தில் (Ausgleichskasse) தமக்கும் சந்தர்ப்பம் உண்டா என விசாரிக்கலாம். இங்கு விசேட விதிமுறைகளுள்ளன. குழந்தை பிறந்து முதல் 8 வாரங்களுக்கு தாயார் வேலை செய்யக்கூடாது (தாய்மைப்பாதுகாப்பு, Mutterschutz).

## தந்தைக்கான விடுமுறை

ஒரு குழந்தை பிறந்த பிறகு தந்தையருக்கு இரண்டு வார ஊதியத்துடன் தந்தைவழி விடுப்புக்கு (Vaterschaftsurlaub) உரிமை உண்டு. தாயின் மகப்பேறு விடுப்புக்கு மாறாக, தந்தைவழி விடுப்பு நெகிழ்வானது: இது ஒரே நேரத்தில் அல்லது தனிப்பட்ட நாட்களில் எடுக்கப்படலாம். இருப்பினும், குழந்தை பிறந்த ஆறு மாதங்களுக்குள் நடைபெறவேண்டும் .

## குடும்ப உதவித்தொகை

எவருக்கு குழந்தைகள் உள்ளனவோ அவர்களுக்கு குடும்ப உதவித்தொகை (Familienzulangen) பணரீதியாக உதவுகிறது. இவை பிள்ளைகள் 16 வயதுவரை பிள்ளைகள் உதவித்தொகையாகவும் இளையோர் மேற்படிப்புக்காலம் 25 வயதுவரை பயிற்சி உதவித்தொகையாகவும் வழங்குகிறது. இதற்கு வேலை செய்யும் (சொந்தத்தொழில் உட்பட) பெற்றோர் மற்றும் வேலை இல்லாத குறைந்த வருமானமுள்ள பெற்றோருக்கும் உரிமையுள்ளது. வேலை செய்பவர்களுக்கு இது மாதசம்பளத்துடன் கொடுக்கப்படும். குடும்ப உதவித்தொகை பற்றிய மேலதிக தகவல்களை தொழில் வழங்குனர் அல்லது கிராமசபைகிளையிலுள்ள சமூககாப்புறுதி நிறுவனத்தில் பெறலாம். குடும்ப உதவித்தொகை மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசப்படும்.

## குடும்ப வாடகை பங்களிப்புகள்

குறைந்த பணம் உள்ள குடும்பங்கள், சில நிபந்தனைகளின் கீழ், தங்கள் வாடகைக்கு (Familienmietzinsbeiträge) ஆதரவு கொடுப்பனவுகளுக்கு விண்ணப்பிக்கலாம். பங்களிப்பின் அளவு வீட்டின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மற்றும் வாடகையின் அளவைப் பொறுத்தது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/social-security/parenthood-and-family

# சமூக நலன்புரி உதவி

சமூகநலன்புரி உதவியானது வாழ்வதற்கு குறைந்தளவு பணத்தை கொண்டுள்ள மனிதர்களுக்கும், சமூகக்காப்புறுதியிலிருந்து குறைந்த அல்லது எதுவுமே கிடைக்காத மனிதர்களுக்கும் உதவிசெய்கிறது. இதன் நோக்கம் மனிதர் மீண்டும் சொந்தமாக உழைக்கசெய்வதாகும். இது அரசின் ஒரு உதவியே அல்லாமல் ஒரு காப்புறுதியின் செயற்பாடல்ல.

## சமூக நலன்புரி உதவி

சமூக நலன்புரி உதவியானது (Sozialhilfe) சுவிசில் அவசரஉதவியை எதிர்பார்க்கும் அனைத்து மனிதர்களுக்கும் உதவுகிறது. இது அடிப்படை வாழ்க்கைச் செலவுகளை உள்ளடக்கியுள்ளது. இது பணவுதவியுடன் ஆலோசனையும் வழங்குகிறது. இதன் நோக்கம மனிதர் விரைவில் பொருளாதாரத்தில் சுயநிலையை அடைதலாகும். சமூக நலன்புரி உதவியானது எவராவது வேறுவழிகளில் தமது வாழ்க்கைக்கு போதியளவு பணஉதவி பெற்றால் கொடுக்கப்படமாட்டாது - உதாரணமாக வேலை இழப்புபணம், ஓய்வூதியம், சம்பளம் அல்லது உறவினரின் உதவி- . அத்துடன் கடனை அடைக்கவும் உதவாது. மனிதர் மீண்டும் போதியளவு பணம் வைத்திருப்பாராயின் எடுத்த பணத்தை மீண்டும் திருப்பிச்செலுத்த வேண்டும். இந்தச்சமூக நலன்புரி உதவியானது வரி செலுத்துபவர்களால் முதலீடு செய்யப்படுகிறது.

## சமூக நலன்புரி உதவிக்கு விண்ணப்பித்தல்

எவர் நலன்புரி உதவிக்கு விண்ணப்பிக்க விரும்பினால் கிராமசபை நலன்புரி பிரிவை (Sozialdienst) நாடவேண்டும். அங்கு வருமானம் மற்றும் சொத்து என்பவற்றை தாக்கல் செய்யவேண்டும். அதைத்தொடர்ந்து அவரிற்கான தகுதி ஆராயப்படும். உதவியின் தொகை தனித்தனியாக ஆராய்ந்து உறுதிசெய்யப்படும். தவறான தகவல்கள் அல்லது மறைத்தல் தண்டணைக்குரியது. சமூகநலன்புரிப்பிரவு கட்டளைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை கொடுக்கும். இதைப்பின்பற்றாவிடின் சேவைகள் குறைக்கப்படலாம். ஆலோசனை உரையாடலில் பங்குபற்றல் கட்டாயமானது. இதில் இருப்போர் தமது அவசரஉதவிவேண்டல் நிலையில் இருந்து சொந்தமாக மீள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க கடமைப்பட்டுள்ளாகள்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/social-security/social-assistance